## கரூர் மாவட்ட ஆதிதிராவிடர் நல விடுதிகளில்

## 2017-2018 ஆம் கல்வியாண்டில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது – மாவட்ட ஆட்சித் தலைவர் (மு.கூ.பொ) திரு.ச.சூர்யபிரகாஷ், எம்.எஸ்.சி, எம்.பில்.(பி.எச்.டி) எச்.டி.சி.எம்., அவர்கள் தகவல் !!!

கரூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகள்.

| | | |
|---|---|---|
| 1. | அரசு ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி. | 01 |
| 2. | அரசு ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதி. | 01 |
| 3. | அரசு ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதிகள். | 10 |
| 4. | அரசு ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவியர் விடுதிகள். | 07 |
| | **ஆக மொத்தம்** | **19** |

ஆக மொத்தம் 19 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் **(மு.கூ.பொ) திரு.ச.சூர்யபிரகாஷ், எம்.எஸ்.சி, எம்.பில்.(பி.எச்.டி) எச்.டி.சி.எம்.,** அவர்கள் பள்ளி விடுதிகளில் 4 முதல் 12ஆம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவர்/ மாணவியர்களும், கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் பாலிடெக்னிக் படிப்புகளில் பயிலும் மாணவ/மாணவியர்களும் சேரத் தகுதியுடையவர்கள் ஆவார்.

விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ/மாணவிகளுக்கு உணவு மற்றும் தங்கும் வசதி இலவசமாக வழங்கப்படுகின்றன.

10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா 4 இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு சிறப்பு வழிகாட்டிகள் /வினா வங்கிகள் வழங்கப்படுகின்றன.

<u>விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்</u>.

- **பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும்.**
- **இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்த பட்சம் 5 கீ.மிக்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியர்களுக்கு பொருந்தாது.**

மாணவ/மாணவியர்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்/காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்/காப்பாளினியிடம் அல்லது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் 12-07-2017க்குள்ளும் கல்லூரி விடுதிகளை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்/காப்பாளினியிடம் அல்லது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் 21.07.2017க்குள்ளும் சமர்ப்பிக்க வேண்டும். மாணவ/மாணவியர்கள் விண்ணப்பிக்கும் பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் எதுவும் அளிக்கத் தேவையில்லை. விடுதியில் சேரும் பொழுது மட்டும் இச்சான்றிதழ்களை அளித்தால் போதுமானது.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, ஆதிதிராவிட மாணவ/மாணவியர்கள் அரசின் இச்சலுகைகளை பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் **(மு.கூ.பொ) திரு.ச.சூர்யபிரகாஷ், எம்.எஸ்.சி, எம்.பில்.(பி.எச்.டி) எச்.டி.சி.எம்.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் (மு.கூ.பொ)**
**கரூர்.**